செ.வெ.எண்: 232

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு பூமிதான வாரியத்தின் முதற்கூட்டம் பூமிதான வாரியத் தலைவர் மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 11.03.2010 அன்று மாலை 4.00 மணிக்கு தலைமைச் செயலகக் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட வாரிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

| | | |
|---|---|---|
| 1. | இயக்குனர் , நிலச் சீர்திருத்தத் துறை | உறுப்பினர் / செயலர் |
| 2. | இயக்குனர் , வேளாண்மைத் துறை | உறுப்பினர் |
| 3. | அரசுச் செயலர், வருவாய்த் துறை | உறுப்பினர் |
| 4. | எஸ்.எஸ்.நாராயணன் | உறுப்பினர் |
| 5. | என்.சுந்தர்ராஜன் | உறுப்பினர் |
| 6. | எஸ்.லோகநாதன் | உறுப்பினர் |
| 7. | ஆர்.ராமச்சந்திரன் | உறுப்பினர் |
| 8. | வி.முருகன் | உறுப்பினர் |
| 9. | கே.ஆர்.கண்ணன் | உறுப்பினர் |
| 10. | கே.கே.ஐ. முத்தையா | உறுப்பினர் |
| 11. | எம்.கே.ஜவஹர் பாபு | உறுப்பினர் |

அனைத்து பூமிதான நிலங்களையும் பார்வையிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் தற்போதைய நிலை அறிந்து அந்த நிலங்களை ஏழைகளுக்கு வழங்க துரித நடவடிக்கை எடுக்க வாரியக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

உறுதியாக்கம், பட்டா மாற்றம் , நில விநியோக நிலுவை இனங்களில் துரித நடவடிக்கை எடுக்க வாரியக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் குழு அமைத்து அந்தந்த மாவட்டங்களில் ஏழைகளை தேர்வு செய்து ஆயிரம் பயனாளிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் மூலம் வீட்டு மனைப் பட்டா வழங்க துரித நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

பூமிதான வாரியத்தில் காலியாக உள்ள பணியிடங்களை உடனடியாக நிரப்பிடத்தீர்மானிக்கப்பட்டது.

25 ஏக்கருக்கு மேல் ஒரே இடமாக உள்ள பூமிதான நிலங்களைப் பட்டியலிட்டு, பார்வையிட்டு தற்போதைய நிலை அறிந்து அதனைச் சரியான பயன்பாட்டிற்குக் கொண்டு வரத் துரித நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

பூமிதான நிலம் பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பினை ரு.16000/– லிருந்து ரு .25000/– ஆக உயர்த்திடத் தீர்மானிக்கப்பட்டது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

2/2